**D**

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8 ]

Total No. of Printed Pages : 8 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 57 ]

Total No. of Questions : 57 ]

**CCE PR**
**UNREVISED**

Question Paper Serial No. **41**

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**

**Code No. : 85-T**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹಳೆ ಪಠ್ಯಕ್ರಮ / Old Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Repeater )**

ದಿನಾಂಕ : 23. 09. 2020 ] [ Date : 23. 09. 2020

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ-1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 57-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

இங்கிருந்து பிரிக்கவும்

TEAR HERE TO OPEN THE QUESTION PAPER
இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

Tear here

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. மைசூர் மாநிலம், “கர்நாடகம்” என பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு

   (A) 1973 (B) 1963

   (C) 1953 (D) 1956

2. சோவியத் ரஷ்ய நாட்டு உதவியுடன் இந்தியாவில் தொடங்கப்பட்ட தொழிற்சாலை

   (A) சர்க்கரைத் தொழிற்சாலை

   (B) உரத் தொழிற்சாலை

   (C) காகிதத்தொழிற்சாலை

   (D) இரும்பு மற்றும் எஃகுத் தொழிற்சாலை

3. ஐ.நா. சபையின் பொதுச்சபை ஏன் உலகப் பாராளுமன்றம் என கருதப்படுகிறது.

   (A) மனித உரிமைகளுக்கு ஆதரவு தருகிறது

   (B) நிறவெறிபேத கொள்கைக்கு எதிராக போராடுகிறது

   (C) ஐ.நா. வின் அனைத்து உறுப்பினாகளையும் கொண்டுள்ளது

   (D) வளர்ச்சியடையாத நாடுகளின் நலனுக்காக கெயல்படுகிறது

4. தீண்டாமை கொடும்பழக்கம் தற்போது குறைந்து வருவதற்கு காரணம்

   (A) வேலை வாய்ப்புகளின் அதிகரிப்பு

   (B) கல்வி வளர்ச்சியின் அதிகரிப்பு

   (C) சிறந்த நலவாழ்வு வசதிகள்

   (D) சிறந்த போக்குவரத்து வசதி

5. தென் இந்தியாவை விட வட இந்திய சமவெளியின் வெப்ப அதிகரிப்புக்கு காரணம் ?

   (A) அது சமமான நிலப்பரப்பை கொண்டுள்ளது

   (B) அது குறைந்த மழைப்பொழிவைப் பெறுகிறது

   (C) அது கட ருந்து வெகு-தூரத்தில் அமைந்துள்ளது

   (D) அது ஒரு பாலைவன மண் பகுதியாக உள்ளது

6. கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்ட அலமட்டி அணைக்கட்டு யாருடைய பெயரால் அழைக்கப்படுகிறது ?

(A) ஜவஹர்லால் நேரு

(B) மொராஜி தேசாய்

(C) சரண் சிங்

(D) லால் பகதூர் சாஸ்திரி

7. "சமய சார்பற்ற மற்றும் பொதுவுடைமை" என்ற சொற்றொடர் பின்வரும் எந்த அரசியலமைப்பு சட்டத்திருத்த விதியின்படி சேர்க்கப்பட்டது ?

(A) 52 வது

(B) 42 வது

(C) 22 வது

(D) 26 வது

8. பின்வருவனவற்றுள் எது மறைமுக வரிக்கு உதாரணம்

(A) தனிநபர் வருமானவரி

(B) சொத்துவரி

(C) கார்ப்பரேட் வரி

(D) சேவை வரி

9. எதிர்கால சேமிப்பு நோக்குடன் தொடங்கப்படும் வங்கி கணக்கு முறை

(A) தொடர் வைப்புதொகை வங்கி கணக்கு (Recurring Deposit Account)

(B) நடப்பு வங்கி கணக்கு (Current Account)

(C) சேமிப்பு வங்கி கணக்கு (Saving Account)

(D) பருவவைப்புத்தொகை வங்கி கணக்கு (Term Deposit Account)

10. விப்ரோ தொழில் நூணுக்க நிறுவனத் தலைவர்

(A) தீருபாய் அம்பாணி

(B) ஏக்தா கபூர்

(C) அசிம் பிரேம்ஜி

(D) வர்கீஸ் கூரியன்

II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் : 14 × 1 = 14

11. வரலாற்று ஆசிரியர்கள் சாதாரண மக்களின் வாழ்க்கை முறைகளை எவ்வாறு விவரிக்கின்றனர் ?

12. பேஷ்வா இரண்டாம் பாஜிவ் ராவ் ஆங்கிலேயரின் துணைப்படைத்திட்டத்தை ஏற்கும்படி ஏன் தள்ளப்பட்டார் ?

13. ஹிட்லர் ஏன் பழுப்பு சட்டை (brown shirts) இராணுவ அமைப்பை ஏற்படுத்தினார் ?

14. "சர்வ சிக்ச அபியான்" திட்டத்தின் நோக்கங்கள் எவ்வாறு நிறை வேற்றப்படும் ?

15. சட்டத்திட்டங்களுக்கு அப்பால் வரதட் சணை கொடுமையை நாம் எவ்வாறு ஒழிக்கலாம் ?

16. இந்தியாவின் மான்செஸ்டர் என்று மும்பை ஏன் அழைக்கப்படுகிறது ?

17. கலப்பு வேளாண்மை (mixed farming) என்றால் என்ன ?

18. தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு விவசாயம் எவ்வாறு துணை புரிகிறது ?

19. ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அந்நாட்டின் தேசிய வருமானம் கொண்டு அளவிடும் முறை சரியானதல்ல. ஏன் ?

20. தனிநபர் வருமானம் எவ்வாறு கண்டறியப்படுகிறது ?

21. குழந்தை தொழிலாளர் குறித்து நம்நாட்டு அரசியலமைப்பு சட்டவிதி 24 எவ்வாறு தொழிற்சாலைகளுக்கு எச்சரிக்கை விடுக்கிறது ?

22. இந்தியாவில் தற்போது மைக்காவின் ஏற்றுமதி ஏன் குறைந்துள்ளது ?

23. ஐ.நா. வின் யூனிசெப் (UNICEF) ஏன் ஏற்படுத்தப்பட்டது ?

24. தொழில் முனைவோர் என்போர் யார் ?

III. பின்வரும் வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் இரண்டு வாக்கியங்கள் வரை விடையளி :

$25 \times 2 = 50$

25. பிளாசிப் போரின் விளைவுகள் யாவை ?

26. மூன்றாம் ஆங்கில மைசூர் போருக்குப் பின் திப்புசுல்தான் ஆங்கிலேயர்களுக்கு எதிராக போரிட எவ்வாறு தன்னை தயார்படுத்திக் கொண்டார் ?

27. ஜோதி பா பியுலே சீர்திருத்தங்களை கூறுக.

28. ரஷ்யப்புரட்சிக்கான காரணங்கள் யாவை ?

அல்லது

முதல் உலகப்போருக்கான காரணங்கள் யாவை ?

29. கொள்ளை இலாபத்தை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகள் யாவை ?

30. கைகா அணுசக்தி நிலையத்துற்கு எதிராக ஏன் போராட்டம் எழுந்தது ?

31. உலக மனித உரிமைகளின் பிரகடனம் எவற்றை தடுக்கிறது ?

32. இந்தியாவின் தீபகற்ப பீட பூமியின் பொருளாதார முக்கியத்துவம் பற்றி விவரி.

33. மண்ணரிப்புக்கான காரணங்கள் யாவை ?

34. காடுகளை பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

35. தூரபுலணர்வு தொழில் நுட்பம் (Remote Sensing Technology) எவ்வாறு பயன்படுகிறது ?

36. நிலச்சரிவினால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

37. மனித இடப்பெயர்ச்சியை (மனித குடியேற்றம் Human migration) எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

38. ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகள் யாவை ?

39. உலகமய மாக்கல் எவ்வாறு சுற்றுச்சுழல் பாதிப்பிற்கு வழி வகுக்கிறது ?

40. கடல் வழி பயணத்தில் மாலுமிகளுக்கு உதவிய அறிவியல் கருவிகள் யாவை ?

41. ஒழுங்கு முறைச் சட்டத்தின் முக்கிய கோட்பாடுகள் யாவை ?

42. முதல் இந்திய சுதந்திரப் போருக்கான உடனடிக் காரணம் என்ன ?

43. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை போக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

44. தற்கால உலகிற்கு படைக்குறைப்பு ஏன் மிகவும் அலசியமாகிறது ?

45. தொழில்பாகுபாடுவினால் உண்டாகும் நன்மைகள் யாவை ?

46. "இந்திய விவசாயம் பருவமழையின் சூதாட்டம்" என ஏன் அழைக்கப்படுகிறது ?

47. மரபு சாரா ஆற்றல் வளங்களின் பயன்பாட்டை நாம் ஏன் அதிகரிக்க வேண்டும் ?

48. தற்காலத்தில் வேளாண்மைத் துறை எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தீர எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை ?

49. சுய வேலைவாய்ப்பு திட்டங்களுக்கு உதவிபுரியும் நிதி நிறுவனங்கள் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் : $6 \times 3 = 18$

50. பொருளாதார மாற்றங்கள் எவ்வாறு முதல் இந்திய சுதந்திர போருக்கு காரணங்களாக அமைந்தன ?

*அல்லது*

ஆங்கிலேயர்கள் கல்வித்துறையில் எவ்வாறு மாற்றங்களை கொண்டுவந்தனர் ?

51. இந்திய அயல்நாட்டுக்கொள்கையின் நோக்கங்கள் யாவை ?

*அல்லது*

மக்களாட்சி புரியும் நாடுகள் என்ற வகையில் இந்தியா மற்றும் அமெரிக்காவிற்கு இடையே நிலவும் உறவைப்பற்றி விவரி.

52. தீண்டாமையை அடியோடு ஒழிக்க எடுக்கப்பட்ட அரசியலமைப்பு சட்ட நடவடிக்கை யாவை ?

*அல்லது*

முறைப்படுத்தப்படாத பணியாளர்களின் பிரச்சனைகள் யாவை ?

53. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சாலை போக்குவரத்து ஆற்றும் அரும்பங்கினை விவரி. ?

*அல்லது*

ஓரிடத்தில் தொழிற்சாலை அமைக்கத் தேவையாக காரணிகள் யாவை ?

54. பெண்கள் சுய உதவிக் குழுக்கள் எவ்வாறு ஒரு தூய்மையான மற்றும் முன்னேற்றத்தை கொண்ட சமூகத்தை கட்டியெழுப்ப துணை புரிகிறது ?

*அல்லது*

அரசாங்கத்தின் வரிகளற்ற வருமானங்கள் யாவை ?

55. வங்கியின் செயல்பாடுகள் யாவை ?

*அல்லது*

காப்பீட்டின் (Insurance) முக்கியத்துவத்தை விவரி.

V. பின்வரும் வினாவிற்கு எட்டு முதல் பத்து வாக்கியங்களில் விடையளிக்கவும். 4

56. இந்திய விடுதலைப் போராட்டத்தில் சுபாஷ் சந்திர போஸ் ஆற்றிய அரும்பங்கினை குறித்து விவரி.

VI. 57. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வரும் இடங்களைக் குறிக்கவும் : 1 + 3 = 4

a) $23\frac{1}{2}^{o}$ வடக்கு அட்ச ரேகை

b) வட இந்தியச் சமவெளி

c) பாம்பே ஹை

**கண் பார்வைத்திறன் அற்றோர்ககான வினா *:* (வினா எண் 57க்கான மாற்று வினா)**

இந்தியர் வாழ்வில் இமயமலையின் பயன்கள் குறித்து விவரி. 4